# தமிழ் மக்கள் நிச்சயம் அறிந்து கொள்ள வேண்டியது

வெளியீடு :

ஈழமக்கள்
நட்புறவுக் கழகம்
வேலாண்டிப் பாளையம்
கோவை.

வடக்கு கிழக்கு மாகாணத்திற்கான பொதுத்தேர்தல் நடந்து முடிந்து விட்டது: இப்படி ஒரு தேர்தல் நடக்க முடியுமா என்பதை எண்ணிப்பார்க்க முடியாத காலம் ஒன்று இருந்தது ஏன்? புலிகளின் கேடு விளைவிக்கக்கூடிய செல்வாக்கு இதற்குக் காரணமாகும்.

தமிழ் மக்களிடையே தமிழீழ விடுதலைப்புலிகள் சக்திமிக்க போராளிகள் குழுவாக விளங்கினர். இரண்டாண்டுகளுக்கு முன்பு வரை புலிகளின் நிலை இப்படித்தான் இருந்தது. இதன் காரணமாக மாகாண சபைக்கானத் தேர்தலின் போது மக்கள் மத்தியில் பீதியை கிளப்பிவிட இவர்களால் முடிந்தது. ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்ற பொதுத் தேர்தலின் போது கூட இத்தகைய பீதி காணப்பட்டது. ஏனென்றால் 1989 புத்தாண்டு தினத்தன்று தமிழ் ஈழம் பிறக்கப் போவதாகவும், தேர்தலில் பங்கெடுப்போர் துரோகிகளாகக் கருதப்பட்டு தண்டிக்கப் படுவார்கள் என்றும் புலிகள் கூறிவந்தனர்.

ஏனெனில் தேர்தல்கள் நடைபெற்றால் தமிழ் ஈழம் என்ற "தனி நாடு" என்பது வடிவெடுக்க முடியாத நிலை உருவாகும் என்பதில் புலிகள் சமரசமற்ற கருத்து கொண்டிருந்தனர். எனவே தான் புலிகள் தேர்தலை பகிஷ்கரிக்கும்படி அறைகூவல் விடுத்தனர்.

தமிழ் மக்களின் மீது புலிகளின் பிடி இருவகைப் பட்டதாய் இருந்தது. ஒன்று புலிகளின் மீது மக்களுக்கிருந்த அச்சம். சொல்லப்போனால் களத்தில் நின்ற ஒரே போராளிகள் அமைப்பாக புலிகள் இருந்தனர் என்பதே இந்த அச்சத்திற்கு ஒரு காரணமாகும். மற்றது புலிகளின் ஈவிரக்கமற்ற குரூரத்தனம். இரண்டாவதாக தமிழ் மக்களுக்கு புலிகள் மீது இருந்த பரிவு மற்றும் அனுதாப உணர்வுகள் ஒரு காரணம். அதாவது 'இவங்களும் எங்கட பொடியங்கள் தானே. கடந்த காலங்களில் முற்றுகையின் போது நின்டு சண்டை பிடிச்சாங்கள் தானே' என்ற உணர்வுகள். இந்த இரண்டு அம்சங்கள் தான் மக்கள் புலிகளின் பக்கம் கவனத்தைச் செலுத்தி வந்ததற்கான காரணங்களாக இருந்துள்ளன.

யாழ்குடா நாட்டில் புலிகளின் பிடிப்பு மிகவும் வலுவானதாக இருந்தது. யாழ்குடா நாட்டை விட்டு ஒருவர் வெளியில் சென்றால் புலிகளின் செல்வாக்கு தேய்ந்து போய் இருப்பதை உணருவார்.

# உளுத்துப் போன சக்தி:-

இந்தப் பின்னணியில் புலிகள் உளுத்துப்போன சக்தியா அல்லவா என்பதை மதிப்பீடு செய்ய முடியும். கடந்த ஆறுமாத காலமாக நடந்து வரும் சம்பவங்கள் புலிகளின் அத்தியாயம் முடிந்தது என்பதைத் தெளிவாகக் காட்டக் கூடியனவாய் உள்ளன.

செப்டம்பரில் நடந்த மாகாணசபைத் தேர்தல் புலிகளின் பலத்தின் மீது முதல் விரிசலை ஏற்படுத்தியது. வழமை போல புலிகள் தேர்தலை பகிஷ்கரிக்கக் கோரி அறைகூவல் விடுத்ததுடன், தேர்தல் நடக்காமல் தடுத்திட மிகவும் கீழ்த்தரமான நடவடிக்கைகளில் புலிகள் ஈடுபட்ட போதிலும், மக்கள் இவற்றை யெல்லாம் முற்றாக நிராகரித்து பெரும் எண்ணிக்கையில் சென்று வாக்களித்தனர். கிழக்கில் 90 வீதம் வாக்களிப்பு நடந்தது.

வடக்கில் போட்டி இன்றி தேர்தல் முடிந்தது. வேறு ஒரு கட்சியும் எதிர்த்துப் போட்டியிடாமல் இருந்ததற்கு தாங்களே காரணம் என்று புலிகள் மார்தட்டிக் கொள்ளலாம். ஆனால் வடக்கிலும் தேர்தலை முற்றாக தடுக்க முடியாது போனதில் புலிகளின் இயலாமையே தெளிவாக வெளிப்பட்டது.

டிசம்பரில் நடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது மீண்டும் புலிகள் பகிஷ்கரிக்கும்படி அறைகூவல் விடுத்தனர். ஆனால் வடக்கிலும் கிழக்கிலும் வாக்களிப்பு நடைபெற்றது. வடக்கில் 20 வீதம் கிழக்கில் 70 வீதம் வாக்குகள் பதிவாகின.

பிப்ரவரியில் நடந்த பாராளுமன்றப் பொதுத்தேர்தல் புலிகளது சவப்பெட்டியில் கடைசி ஆணியை அடித்து முடித்தது. இத்தேர்தலில் யாழ்குடா நாட்டில் 45% இதர தமிழ் பகுதிகளில் 60% வாக்குப் பதிவு நடந்தது, புலிகளின் பகிஷ்கார அறைகூவல் அர்த்தமற்றுப் போனது.

இவ்வாறாக புலிகளின் கொட்டம் படிப்படியாக அடக்கப் பட்டது ஏனைய போராளிக் குழுக்கள் மீண்டும் முன்னணிக்கு வந்தனர். புலிகள் பின்னுக்குத் தள்ளப்பட்டனர். எனினும் புலிகள் பற்றியும், பொதுத் தேர்தல்கள் பற்றியும் விடைகாணமுடியாத புதிர்கள் பல இன்னும் இருக்கவே செய்கின்றன.

வேட்புமனுதாக்கல் செய்ய விரும்பியவர்களை புலிகளால் தடுக்க முடியவில்லை. ஆனால் வேட்புமனு தாக்கல்செய்து முடிந்த

பிறகு. தேர்தலில் பங்கெடுப்பவர்கள்...... எந்த வகையான பங்கெடுப்பாயிருந்தபோதிலும் கொல்லப்படுவார்கள் என்று பெரிய சுவரொட்டிகளின் மூலம் அறிவிப்பு செய்தனர். இத்துடன் நில்லாது, ஜனவரி 7, 11, 28 தேதிகளிலும் பிப்ரவரி 5 ஆம் தேதியும் புலிகள் பத்திரிகைகளில் அறிக்கைகள் வெளியிட்டனர். தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டும் என்றும், துரோகிகள் கொல்லப்படுவார்கள் என்றும் அவ்வறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. தேசிய மற்றும் இந்து தேசிய மட்டத்தில் இவ்வறிக்கைகளுக்கு பெருமளவில் விளம்பரப்படுத்தப் பட்டது.

ஆனால் இதில் முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவென்றால், துரோகிகளின் பட்டியலில் அனைத்து இயக்கங்கள், கட்சிகளின் பெயர்களிலும் இவ்வறிக்கைகளில் வரிசைப்படுத்தப் பட்டிருந்தன. யு. என். பி. மற்றும் ஈரோசு இரண்டும் குறிப்பிடப் படவில்லை. இது ஏன்? புலிகள் இதற்கு பதில் சொல்வார்களா? யு. என். பி. யுடன் புலிகளுக்கு ஒரு தொடர்பு உண்டு. ஈரோசும் புலிகளும் நெருக்கமாக இணைந்தே செயற்படுகின்றனர் என்று கருதலாமா? தமிழ் மக்கள் இது பற்றி தெரிந்து கொள்வது அவசியம்.

வேட்பு மனுதாக்கல் செய்து முடிந்த உடன் யாழ் மாவட்டத்தில் ஈரோஸ் பட்டியலில் இருந்து மூன்று பேர் தாங்கள் போட்டியில் இருந்து விலகிக் கொள்வதாக பத்திரிகைகளில் விளம்பரம் செய்தனர். இன்னும் சொல்லப்போனால் தாங்கள் அனைத்து மாவட்டங்களிலும் போட்டியில் இருந்து வாபஸ் பெற்றுக் கொள்வதாக தேர்தல் ஆணையருக்கு ஈரோஸ் கடிதம் மூலம் தெரியப்படுத்தியது. இப்படி நிலை எடுத்ததாலேயே தாங்கள் வானொலியிலும் தொலைக்காட்சியிலும் பிரச்சாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக ஈரோஸ் காட்டிக் கொண்டது. சொல்லப்போனால் ஈரோஸ் தனது தேர்தல் அறிக்கைகளை கூட வெளியிடாமல் இருந்தது.

மற்றுமொரு விசித்திரமான சம்பவம் என்னவென்றால் டிசம்பர் மாத இறுதியில் ஒரு பொது அணியை உருவாக்குவது தொடர்பாக இந்தியத் தூதுவராலயத்தில் நடை பெற்ற எல்லா கூட்டங்களிலும் ஈரோஸ் தவறாமல் கலந்து கொண்டதுதான் ஆனால் அமைக்கப்பட்ட பொது அணி அறிவிக்கப்பட்டபோது அதில் ஈரோஸ் காணப்படவில்லை. என்ன வேடிக்கை. டி. யு. எல். எப்., ஈ. பி. ஆர். எல். எப்., ரெலோ மற்றும் ஈ. என். டி. எல். எப். போன்றவற்றை பொது அணியில் பங்கு பெற்ற இசைய வைக்க முடிந்த இந்தியத் தூதரால் ஈரோஸை

இசைய வைத்து பொது அணியில் கொண்டு வர முடியாமற் போனதெப்படி?

தங்கள் தலைவர் பாலகுமார் இந்திய விமானங்களில் பறந்து கொண்டு இருக்கும் நிலையில், இந்திய வலிமையை எதிர்க்க ஈரோசால் எப்படி முடிந்தது? யாழ்ப்பாணம் கோயில் வீதியில் உள்ள ஈரோசில் தலைமையகத்திற்கு இந்திய இராணுவத்தால் பாதுகாப்புப் பெற்றுக்கொண்டிருக்கும் நிலைமைகளில் ஈரோசால் இந்தியாவை எதிர்க்க முடிந்துள்ளதே? இது எவ்வாறு சாத்தியம்? ஒருவேளை இவையாவும் வெறும் நாடகம்தானா? தமிழ் மக்கள் அவசியம் இதனை தெரிந்து கொண்டாக வேண்டும்.

1987 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் அமைக்கபடவிருந்த இடைக்கால நிர்வாக சபையில் தனக்கு வழங்கப்பட்ட இடத்தை ஏற்றுக் கொள்ள ஈரோஸ் மறுத்தது இதுவே புலிகளின் முகத்தில் ஈரோஸ் ஓங்கி ஒரு அறை கொடுத்தது மாதிரி தான். ஆனால் இதே சமயத்தில் ஈரோஸ் மாகான சபைத் தேர்தலிலும் பங்கெடுக்காமல் இருந்தது. ஜனாதிபதித் தேர்தல் குறித்து எந்த விதமான நிலைப்பாடும் எடுக்காமல் தவிர்த்தது. போன்ற விடயங்களையும் அவதானிக்க வேண்டும். இவற்றைப் பொறுத்தமட்டில் புலிகளின் நிலைப்பாடும் ஈரோசின் நிலைபாடும் ஒத்திருந்தது.

பின்னர் திடீரென்று, டிசம்பர் மாத இறுதியில் தன்னை ஒரு அரசியல் கட்சியாக வடிவமைத்துக் கொண்டு ஜனநாயக நடைமுறை என்னும் நீரோட்டத்தில் இணையப் போவதாக ஈரோஸ் வான வேடிக்கைகள் காட்டத் துவங்கியது. இவர்களுடைய கூட்டாளியான புலிகளின் ஆசியுடன் தான் இது நடை பெற்றதா? அல்லது ஒரு வேளை இந்தியாவின் ஆலோசனையின் படி நடைபெற்றதா? தமிழ் மக்கள் இது பற்றி அறிந்து கொள்ளத்தான் வேண்டும்.

ஈரோஸ், பொதுத் தேர்தலுக்காக தனது வேட்பாளர் பட்டியலில் சில உயர் மட்ட புலிகள் ஆதரவாளர்களைச் சேர்த்திருந்தது புலிகளின் வேண்டுகோளின் பேரில்தான் இவர்களது பெயர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பதாக ஈரோஸ் பிரச்சாரம் செய்தது. யாழ்குடா நாட்டைச் சேர்ந்த எம் போன்றோர் இதனை நன்கு அறிவர். இப்படிப்பட்ட பிரச்சாரம் நடைபெற்றது புலிகளுக்குத் தெரியாமல் இருக்க நியாயமில்லை. அப்படியானால் இப்பிரச்சாரம் உண்மைதானா? புலிகளின் மௌனம் இதனை உறுதி செய்கிறது தானே? தமிழ் மக்கள் இதனை அறிந்து கொண்டாக வேண்டும்.

ஈரோசின் தேர்தல் பிரச்சாரம் எப்போது தொடங்கியது தெரியுமா? வானொலியிலும் தொலைக்காட்சியிலும் பிரச்சார ஒலிப்பரப்புகள் அமைக்கப்பட்டிருந்த கடைசி நாளான 11ம் தேதிதான் இவர்களது தேர்தல் பிரச்சாரமே தொடங்கியது. யாழ்குடா நாடு முழுவதும் ஆயிரக் கணக்கில் போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருப்பதை 12ம் தேதி காலையில் தான் காணக் கூடியதாக இருந்தது. இரவு நேரங்களில் இந்திய ராணுவமும், புலிகளும் சுற்றித் திரிந்து கொண்டிருந்த போது இவர்களுக்கு இது எப்படி சாத்தியமாயிற்று? அல்லது, ஒரு வேளை ஈரோஸ் புலிகள் மற்றும் இந்திய ராணுவமும் இணைந்து அரங்கேற்றிய திருவிளையாடலோ? இந்தத் தேர்தலைப் பொறுத்த மட்டில் இந்திய நிலைப்பாட்டுக்குச் சாதகமான நிலைக்குப் புலிகளை கொண்டு வர ஈரோசால் முடிந்துள்ளது என்பதாக இந்தியர் களுக்கு ஈரோஸ் தெளிவுபடுத்தி இருக்கக் கூடுமோ?

12ம் தேதி ஒட்ட தயாராக ஆயிரக் கணக்கான போஸ்டர் களை ஈரோசால் அச்சடிக்க முடிந்தது இதனால் தானோ? 10 முதல் 12 பேர் கொண்ட குழுக்களாக யாழ்குடா நாடு முழுவதும் வீடு வீடாகச் சென்று ஈரோஸ் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டதே? 12ம் தேதி தொடங்கி இரண்டு நாட்கள் இவ்வாறு பிரச்சாரம் நடத்தப் பட்டதே? ஏனைய கட்சிகள் தங்கள் மறைவிடங்களில் இருந்து வெளியில் வரமுடியாதிருந்த போது இவர்களுக்கு மட்டும் இது சாத்தியமானது எப்படி? யார் காதில் யார் பூ சுற்றியது? இந்தியாவிற்கும் புலிகளுக்கும் ஈரோஸ் சுற்றிவிட்டதா? (அல்லது) இந்திய எதிர்ப்பு அலை வீசத் தொடங்கி இருப்பதை மதிப்பிட்ட இந்தியா வேறு எவரும் வருவதைக் காட்டிலும் ஈரோஸ் வந்தால் சுலபமாக இருக்கும் என்று கருதி தனது பாரம்பரைச் சாணக்கியத்தை அரங்கேற் றியதா? கட்டாயம் தமிழ் மக்கள் இதனை அறிந்து கொள்ளத் தான் வேண்டும்.

தேர்தல் முடிந்து இருவாரங்கள் முடிந்து விட்டன. பாராளு மன்றம் கூடுவதற்கு சரியாக ஒரு வாரம் தான் உள்ளது. வழக்கமாக ஏதாவது சலசலப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் புலிகளிடம் இருந்து எந்த விது சத்தத்தையும் காணோம்? எல்.ரி.ரி.ஈ. மடிந்து விட்டது என்பது இதன் பொருளா? மோச மான முடை நாற்றம் வீசும் குப்பைக் கூளங்கள் அகற்றப்பட்டது போன்ற ஒரு நலை சங்கதிதான் இது. ஒரு வேளை அது மடிந்து விட வில்லையானால், புலிகளிடமிருந்தும் ஈரோசிடமிருந்தும் தமிழ் மககள் தெரிந்து கொள்ள விரும்புவது இதுதான்... நீங்கள் ஒன்று சேரப்போகிறீர்களா இதனை அறிந்து கொள்ள தமிழ்

மக்கள் கடமைப் பட்டிருக்கிறார்கள். ஏனென்றால் இவர்களைப் பற்றியும் இவர்கள் உண்மையில் எதற்காக நிற்கிறார்கள் என்பதையும் மக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி தெரிந்து கொள்ள இது பயன்படும்.

ஈரோஸ் தனக்குத்தானே ஏராளமாக தகுதிச் சான்றுகளை வழங்கிக் கொண்டு இருக்கிறது. மெத்தப் படித்த மேதாவிகள் நிறைந்த அமைப்பு என்றும், தவறுகளை செய்யாத அமைப்பு என்றும், ஆகக் கடினமான காலகட்டங்களில் மக்கள் சேவையில் ஈடுபட்ட அமைப்பு என்றும் கதைக்கிறார்கள். ஆனால் இவர்களது அலமாரிகளிலும் மண்டைஓடுகள் காணப்படுகின்றதே? வவுனியாவில் சர்வோதய பிரதிநிதி கதிரமலையை இவர்கள் எப்படி கொன்றார்கள்? சவப்பெட்டியை எடுத்துக் கொண்டு பிக்கப்வேணில் இவர்கள் அணிவகுத்துச் சென்று கதிரமலையை வேனுக்குப் பின்னால் கட்டி இழுத்தடித்து பின்னர்சென்ற சவப்பெட்டியில் போட்டு தூக்கி வீசிய பெருமைக் குரியவர்கள் தான் இவர்கள் என்பதை உலகறியும் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர்களில் ஒருவரான சட்டத்தரணி க. கந்தசாமி அவர்களை கொன்று மலக்கிடங்கில் வீசி எறிந்த மாமனிதர்களும் இவர்களே. கந்த சாமி அவர்கள் ஈரோசால் பலமுறை நேரடியாக மிரட்டப்பட்டது குறித்து தன்கைப்படவே தனது குறிப்பேட்டில் குறித்து வைத்துள்ள விவரங்களே இதற்குச் சான்றாகும்.

பொதுமக்களின் நன்மைக்காக வெளிநாடுகளிலுள்ள தர்மதாபனங்களில் இருந்து வந்த பெருந்தொகையான பணத்தை வஞ்சகமான முறையில் கையாடல் செய்ததிலும் இவர்கள் கில்லாடிகள் என்றால் மிகையாகாது. ஏராளமான அப்பாவி மக்களை பலி கொண்ட பல குண்டு வெடிப்புகளை கொழும்பில் நிகழ்த்திய மாபெரும் வீரர்கள் தான் இந்த ஈரோஸ் இயக்கத்தினர்.

இப்படிப்பட்ட அவப் பெயருக்குரிய இவர்கள் தான் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்றால...ஓ...கடவுளே... எண்ணெய்ச் சட்டியில் இருந்து துள்ளி எரி நெருப்பில் விழுந்த கதையாகி விடாதா? இப்படிப் பட்டவர்கள் தான் தமிழர் உரிமையை காப்பாற்றப் போகிறார்களாம்.

கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்பு சம்பவங்கள், அனைத்தும் நடந்துள்ளன இத்தனைக்கும் மத்தியில் தான் மக்கள் பெருமளவில் வாக்கெடுப்பில் பங்கு கொண்டு தங்களுக்கென ஒரு மாகாண அரசை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். இதனை ஏற்படுத்திய மக்கள் நியாயமான உரிமை உடையவர்களே. ஆனால் மக்களுக்கு இப்படி பட்ட பிரச்சனைகள் இனிமேல் எதிர்படாமல் காத்திடவும், ஏற்கனவே ஏற்பட்ட துன்பங்களில் இருந்து மக்களை மீட்டெடுக்கவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மக்கள் பிரதிநிதிகள் என்ன செய்யப் போகிறார்கள் என்பதே கேள்வி?

இவர்கள் சத்தங்காட்டாமல் இருப்பதாலேயே இத்தக் கேள்வி எழுகிறது? கொக்குவிலில் பிப்ரவரி 23ம் தேதி நடைபெற்ற ஐ. பி. கே. எப் சம்மந்தப்பட்ட சம்பவங்கள் தொடர்பாகக் கூட இவர்கள் வாய்த்திறக்கவில்லையே ஏன்? விடயம் இப்படி இருக்கை

யில், வடக்குகிழக்கில் நடந்த தேர்தலில் இவர்களுக்கும் கிடைத்துள்ள வெற்றி இந்திய எதிர்ப்பு, ஒப்பந்த எதிர்ப்பு ஐ.பி.கே.எப். எதிர்ப்பு சக்திகளுக்குக் கிடைத்த வெற்றி என்று அமெரிக்காவில் உள்ள தமிழர் கழகம் அறிக்கை விடுத்துள்ளது. இது குறித்து ஈரோஸ் என்ன கூறப்போகின்றதோ தெரியவில்லை. அல்லது குழப்பல் வாதத்திற்குப் பேர்போன லண்டனிலிருந்து செயற்படும் 'உலகத்தமிழர் குரல்' என்ற புலிகள் ஆதரவு அமைப்பு இதுபற்றி என்ன நிலைப்பாட்டை எடுக்கப் போகிறது?

இந்நிலையில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஈரோஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் யாழ்குடா நாட்டில் இருந்து தலைமறைவாகியுள்ளனர். 'மக்களது துன்பகாலங்களில் மக்களோடு நின்றதாகக்' கூறிக்கொள்ளும் இவர்கள் எங்கே போயொழிந்தார்கள்? கொழும்பில் உள்ள இந்திய தூதராலயத்தில் பாதுகாப்புக் கேட்டு தஞ்சமடைந்திருக்கிறார்களாம்? இவை எல்லாம் எதைக் குறிக்கின்றன? தமிழ் மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

ஆனால் ஓ... புலிகளே நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்? மலைகளில் இருந்து ஓடி வரும் வண்ண நீருற்றுக்கள் திடீரென்று சேறும் சகதியுமாய்ப் போயினவோ' அல்லது சதுப்பு நிலச் சகதியின் அடியில் அமிழ்ந்து மறைந்தனவோ?

ஓ...ஈரோசே... நீ யார்? நீ புலிகளின் கூட்டாளியோ அல்லவோ?' ஆம் என்றால்... என்ன கொள்கையின் அடிப்படையில்? சரி உன்னுடை கொள்கைதான் என்ன?

தேர்தல்கள் தான் நடந்து முடிந்துவிட்டனவே... குறைந்த பட்சம் இப்போதாவது ஈரோஸ் தனது கொள்கைகளை உலகுக்கு அறிவிக்கலாம் அல்லவா? ஈரோஸ் தமிழீழத்திற்காக நிற்கிறதா? அல்லது 6 வது சட்ட திருத்தம் ரத்து செய்யப்படக் கூடாது என்பதற்காக நிற்கிறதா?

அல்லது இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கு ஆதரவு நிலை எடுக்கிறதா? இந்தியப்படை வாபஸ் ஆவதை விரும்புகிறதா?

ஈரோசே... இன்னும் நீயேன் மதில் மேல் அமர்ந்து கொண்டு இருக்கிறாய்?

தமிழ் மக்கள் இதனை அறிந்து கொள்ள வேண்டும்.?

(05-3-89) இலங்கையிலிருந்து
வெளிவரும் 'தி ஐலண்ட்
(The Island) பத்திரிகையில்
ராமு என்பவர் எழுதிய
கட்டுரையின் தமிழாக்கம்.

---

தேவநேயன் பிரிண்டர்ஸ், 351, T. H. ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.